

திருப்பத்தூர் மாவட்ட திமுக மாணவரணி சார்பில் ஜோலார்பேட்டை நேசம் முதியோர் காப்பகத்தில் நடைபெற்ற முதல்வர், கழக தலைவர் தளபதி அவர்களின் பிறந்தநாள் விழாவில் திருப்பத்தூர் மாவட்ட செயலாளர், க.தேவராஜி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு காப்பகத்தில் உள்ள முதியோர்களுக்கு மதிய உணவு வழங்கினார். மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தே.பிரபாகரன் தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியில் நகர செயலாளர் ம.அன்பழகன், எம்.சிங்காரவேலன், ஆர்.சுதா, காவியாவிக்டர், இந்திரா பெரியார்தாசன், எஸ்.ஹரிஷ்குமார், டி.சி.கார்த்திக் அம்சவேணிஜெயக்குமார், மகேந்திரன், பாஸ்கர், இனியன், சுரேஷ், மாவட்ட அணிகளின்து.நிர்வாகிகள்சி.எஸ்.பெரியார்தாசன், பி.ஆர்.முகிலன், காளியப்பன், முனிசாமி, நகரஅணிநிர்வாகிகள்சிலம்பரசன், கோபி, விமல், வசியுல்லா, வினோத்குமார், ஹரிஹரன், வார்டு உறுப்பினர்கள் பிரசாந்த், சிவக்குமார், சாந்தி, புன்னகை, வித்யா மற்றும் பலர் உடன் இருந்தார்கள்.

## மருதமலையில் முதல்வர் பிறந்தநாள் விழா!

கோவை, மார்ச் 5–

தி.மு.க. தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கோவை மருதமலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் பணி யாற்றும் தூய்மை பணியாளர் களுக்கு 01.03.2025 அன்று கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாநில துணைச் செய லாளர், மருதமலை அறங்காவலர் சுகன்யா ராஜரத்தினம் ஆகியோர் மளிகை பொருட்களை வழங்கி னார்கள், 01.03.2025 அன்று மதியம் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியை மாநில துணைச் செயலாளர் மீனா ஜெயக்குமார், மருதமலை அறங்காவலர் சுகன்யா ராஜரத்தினம் ஆகியோர் துவக்கி வைத்தனர், நிகழ்ச்சியில் மருதமலை அறங்காவலர் குழு உறுப்பினர்கள் மகேஷ்குமார், கனகராஜ், பிரேம்குமார் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




### சிவகங்கை மாவட்டத்தில் இன்று 5ம் தேதி முதல் 4 தினங்கள்

# 4 தொகுதிகளில் ஒன்றிய பா.ஜ.க.அரசைக் கண்டித்து பொதுக்கூட்டங்கள்!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை, மார்ச் 5-



கழகத் தலைவர், முதல்வர் தளபதி அவர்களின் உத்தரவின் மாநில இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர்உதயநிதி ஸ்டாலின் அறிவுரையின் படி அறிவிப்பு மாநிலம் முழுவதும்234சட்டமன்ற தொகுதிகளில் தமிழகத்திற்கு ஒன்றிய அரசின் நிதி வழங்குதலில் பாரபட்சம், மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தி மொழி திணிப்பை கண்டித்தும்,தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் தமிழகத்தில் பாராளுமன்ற தொகுதி குறைக்க படுவதை கண்டித்தும் மாவட்டம் வாரியாக 234 சட்டமன்ற தொகுதியிலும் கண்டன பொதுக்கூட்டங்கள் நடைபெறுகிறது. அதன்படி சிவகங்கை மாவட்டத்தில்மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் ஏற்பாட்டின் பேரில் இன்று 5ம்தேதி முதல் 6, 9, 10, ஆகிய தேதிகளில் நான்கு தினங்கள் 4. சட்டமன்ற தொகுதிகளில் கண்டன பொதுக் கூட்டங்கள் கீழ்க் கண்டவாறு நடைபெறுகிறது.

1.காரைக்குடி இன்று 5.3.25ம் தேதி புதன்கிழமை மாலை காரைக்குடி 5 விளக்கு பகுதியில் தலைமை கழக பேச்சாளர்கள் துரை சம்பத், பி.ஜோஷிஅபர்ணா, ஆகியோர் கண்டண உரை ஆற்றுகிறார்கள்.

2.சிவகங்கை நாளை 6 .3.25ம் தேதி வியாழக் கிழமை மாலை 6.00மணிஅளவில் சிவகங்கை சண்முக ராஜா கலை அரங்கில் பேச்சாளர்கள் செந்தில் வேல், ஞா. சந்தியா ஆகியோர் கண்டண உரை ஆற்றுகிறார்கள்.

3.திருப்பத்தூர் 9.3.25ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00மணி அளவில் திருப்பத்தூர் அண்ணா திடலில் எம். .எம் .அப்துல்லா எம்.பி. கு .சுமித்ரா ஆகியோர் கண்டண உரையாற்றுகிறார் கள்.

4 . மானாமதுரை 10.3.25ம் தேதி திங்கட்கிழமை மாலை6.00மணிஅளவில் மானாமதுரை நகராட்சி அலுவலகம் அருகில் மருத்துவர் யாழினி, கு .ஹரி சங்கர் ஆகியோர் கண்டண உரை ஆற்றுகிறார்கள்.

இந்த கண்டண பொதுக் கூட்டங்களில் மாவட்ட கழக நிர்வாகிகள் ,தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர,பேரூர், கழக செயலாளர்கள், சார்பு. அணி நிர்வாகிகள், இளைஞரணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் தவறாதுகலந்து கொண்டு கூட்டத்தினை சிறப்பித்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன். கூட்டத்திற்கான ஏற்பாடுகளை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் தலைமையில் இளைஞரணி நிர்வாகிகள் செய்து வருகிறார்கள் .

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### கடலூர் மேற்கு மாவட்டம் நல்லூர் வடக்கு ஒன்றியம்!

# பூலாம்பாடி ஊராட்சி சுப்பிரமணியன் மனைவி அஞ்சலை அம்மாள் மறைவு

### கழகத்தினர் - தோழமைக் கட்சியினர் அஞ்சலி!

கடலூர், மார்ச் 5 -



கடலூர் மேற்கு மாவட்டம் வேப்பூர் வட்டம் நல்லூர் வடக்கு ஒன்றியம் பூலாம்பாடி கிராமத்தைச் சார்ந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் மீதும் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் மீதும், கழகத்தின் மீதும் மிகவும் பற்று கொண்டவர் பூலாம்பாடி ஊராட்சிக் கழக தீவிர தொண்டர் மூத்த முன்னோடி நினைவில் வாழும் சுப்பிரமணியன் அவர்களின் மனைவி திருமதி. அஞ்சலை அம்மாள் (வயது 63) உடல் நலக் குறைவினால் நேற்று (04.03.2025) செவ்வாய்க்கிழமை காலை 10 மணி அளவில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும் கழகத்தினர் மற்றும் தோழமைக் கட்சியை சார்ந்தவர்கள் மற்றும் கிராம முக்கியஸ்தர்கள் தர்மகர்த்தாக்கள், நேரில் சென்று மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அம்மையாருக்கு வசந்தி, பிரபா என்ற இரண்டு மகள்களும் பி.எஸ். மணிகண்டன் என்ற ஒரு மகனும் பானுப்பிரியா (ஊராட்சி செயலாளர்) என்ற மருமகளும், மருமகன்களும் மற்றும் பேரக் குழந்தைகளும் உள்ளனர்.

அம்மையாரின் இறுதி ஊர்வலம் இன்று 05.03.2025 புதன்கிழமை மாலை 4 மணி அளவில் அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு பூலாம்பாடியில் உள்ள இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.




கடலூரில் அனைத்து குடியிருப்போர் நலச் சங்கங்களின் கூட்டமைப்பு மற்றும் தனியார் மருத்துவமனை சார்பில் இலவச பொது மருத்துவ முகாம் நடைபெற்றது. முகாமிற்கு கூட்டமைப்பு தலைவர் பச்சையப்பன் தலைமை தாங்கினார். சிறப்பு தலைவர் மருதவாணன், துணைத் தலைவர் ரங்கநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொதுச் செயலாளர் வெங்கடேசன் வரவேற்றார். முகாமில் அய்யப்பன் எம்.எல்.ஏ. சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மருத்துவ முகாமை தொடங்கி வைத்தார். மாநகராட்சி துணை மேயர் தாமரைச்செல்வன், தாசில்தார் பலராமன் ஆகியோர் வாழ்த்துரை ஆற்றினார்கள். இதில் கூட்டுறவு சங்க தலைவர் ஆதி பெருமாள், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சுதாகர், சங்கத் தலைவர் ஜெகநாதன், பொருளாளர் குமார், கூட்டமைப்பு இணைச் செயலாளர் தேவநாதன், ஊராட்சி செயலாளர் வேலவன், வத்சலா ரமணி உட்பட கலந்து கொண்டனர். முடிவில் பொருளாளர் வெங்கட ரமணி நன்றி கூறினார்.



மார்ச் 1 தமிழ் நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாளை முன்னிட்டு, கள்ளக் குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர்,ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் வழிகாட்டுதலின்படி, ரிஷிவந்தியம் தெற்கு ஒன்றியம் லா.கூடலூர்,பாசார், மேலப்பழங்கூர், மையனூர், பழையசிறுவங்கூர், கீழ்ப்பாடி, பாவந்தூர், பேரால் ஆகிய ஊராட்சிகளில் ஒன்றிய கழக செயலாளர் எம்.பெருமாள் முன்னிலையில் கழக கொள்கை பரப்பு துணை செயலாளர், தொகுதி பார்வையாளர் அ.ச.பெருநற்கிள்ளி தலைமையில் கழக தலைவரின் ஆனைக்கினங்க உறுதிமொழியை கூறி கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்கி பொதுமக்கள் மற்றும் கழக நிர்வாகிகள் அனைவருக்கும் அறுசுவை உணவு பரிமாறப்பட்டது, இந்நிகழ்வில் மாவட்ட பொருளாளர் ஆதி.கு.கோவிந்தராஜன்,பொதுக்குழு உறுப்பினர் ஆர்.ராஜு மற்றும் ஒன்றிய அவைத் தலைவர் கே.சுந்தரராஜன்,மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் செல்வகுமார் மற்றும் மாவட்ட, ஒன்றிய,கிளைக் கழகம் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் பலர் உடன் கலந்து கொண்டனர்.

### முதல்வர் பிறந்தநாள் விழா!

# புதுக்கோட்டையில் ரத்ததான முகாம்!

புதுக்கோட்டை, மார்ச் 5–

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மருத்துவ அணி சார்பில் திருமயம் வெ.மு சத்திரத்தில் மாபெரும் இரத்த தான முகாம் நடத்தப்பட்டது. இந்த இரத்ததான முகாமை மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் மருத்துவர் அண்ணாமலை ரகுபதி துவங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் மருத்துவர் சுதர்சன், மாவட்ட மருத்துவ அணித் தலைவர் மருத்துவர் கோ.சதீஷ், மாவட்ட மருத்துவர் அணி நிர்வாகிகள் மருத்துவர் ராஜசேகரபாண்டியன், மருத்துவர் ராஜ் பிரியன்,

மருத்துவர் பாலமுரளி, மருத்துவர் கண்ணதாசன், ஜான் பிரிட்டோ, அமுல்ராஜ். திவ்யா, திருமயம் ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஆறு.சிதம்பரம், இரா.கணேசன், முன்னாள் சேர்மன் சுப.துரைராஜா, மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் இரா. மேகநாதன்,

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் அருண் சேகர், ஜான் மீட்டர், பி.அண்ணாதுரை மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இம்முகாமில் மருத்துவ அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், கல்லூரி மாணவர்கள், தன்னார்வலர்கள் உட்பட 56 நபர்கள் இரத்ததானம் அளித்தார்கள்.

### சுனாமி குடியிருப்புகளைச் சீரமைத்திட வங்கிக் கடனுதவி தள்ளுபடி செய்திடக் கோரிக்கை! நாகப்பட்டினம்

# நம்பியார் நகர் மீனவ மக்களிடம் - முதல்வர் குறைகள் கேட்டறிந்தார்!

### பள்ளி சிறுவர் - சிறுமியர்களின் உற்சாக வரவேற்பை ஏற்று - அவர்களுடன் உரையாடினார்!

நாகை, மார்ச் 5-

நாகப்பட்டினம், நம்பியார் நகர் மீனவ கிராம மக்களைச் நேரில் சந்தித்து அவர்களின் தேவைகள் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டறிந்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.3.2025) நாகப்பட்டினத்தில் நடைபெற்ற அரசு விழாவில் கலந்து கொண்டு, முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள், நாகப்பட்டினம், நம்பியார் நகர் சிறிய மீன்பிடித் துறை முகத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

நம்பியார் நகர் சிறிய மீன்பிடித் துறைமுகம் 34.30 கோடி ரூபாய் செலவில் படகு இறங்குதளம், படகு அணையும் சுவர், தெற்கு மற்றும் வடக்கு பக்க அலை தடுப்புச் சுவர்கள், முகத்து வாராம் ஆழப்படுத்துதல், தடுப்புச் சுவர் மற்றும் தெரு விளக்கு உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் அமைக்கப்பட்டு 9.3.2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மேலும், நம்பியார் நகர் சிறிய மீன்பிடித் துறைமுகத்தில் 700 மீட்டர் கடல் அரிமானம் ஏற்பட்டுள்ளதை தடுப்பதற்காக கூடுதலாக 4 நேர்கல் சுவர் 10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு 8.3.2024 அன்று முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

நம்பியார் நகர் சிறிய மீன்பிடித் துறைமுகத்தில் மீனவப் பெருமக்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் சந்தித்து, அவர்களின் தேவைகள் குறித்து கேட்டறிந்தார். அப்போது மீனவர்கள், முதலமைச்சர் அவர்களிடம் சுனாமி குடியிருப்புகளை சீர்செய்து தர வேண்டும் என்றும், வங்கி கடனுதவிகளை தள்ளுபடி செய்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

அப்போது, முதலமைச்சர் அவர்கள், மீனவர்களின் கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

பின்னர், நம்பியார் நகரிலுள்ள நகராட்சி நடுநிலைப் பள்ளி சிறுவர், சிறுமியர்கள் அளித்த உற்சாக வரவேற்பினை முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டு, அச்சிறுவர், சிறுமியர்களுடன் உரையாடினார்.

இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், சட்டமன்ற உறுப்பினர் முகமது ஷாநவாஸ், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் ந.கௌதமன், தமிழ் நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ.மதிவாணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### விழுப்புரம் மத்திய மாவட்டம்

# கண்டமங்கலம் மேற்கு ஒன்றிய செயல்வீரர்கள் கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

விழுப்புரம், மார்ச் 5 -

கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி, கண்டமங்கலம் மேற்கு ஒன்றிய செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார்.

உடன் மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக் குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், ஒன்றிய கழக செயலாளர் V.G.பிரபாகரன், கண்டமங்கலம் ஒன்றிய குழு பெருந்தலைவர் R.S.வாசன், பொதுக் குழு உறுப்பினர் TNJ.சம்பத், ஒன்றிய நிர்வாகிகள் அவைத் தலைவர் அசோக் குமார், துணை செயலாளர்கள் சுந்தரமூர்த்தி , பூங்குன்றம், ஷிலா ராஜசேகர் , பொருளாளர் முரளிதரன், மாவட்ட பிரதிநிதிகள் B.M.சரவணன், C.ராஜேந்திரன், J.V.முருகன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மேற்கு ஒன்றியம் மாடப்பள்ளி அண்ணா திடலில் கழகத் தலைவர் முதல்வர் பிறந்த நாள் பொதுக் கூட்டம் ஒன்றிய செயலாளர் அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ., தலைமைக் கழகப் பேச்சாளர்கள் சேலம் சுஜாதா, வேலூர் ரமேஷ் ஆகியோர் பேசினர். உடன் எஸ்.இராசேந்திரன், டி.ரகுநாத், சு.அரசு, ஜோதி ராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



முதலமைச்சர்,கழகத்தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம் .ஆர் .கே .பன்னீர்செல்வம் அறிவுறுத்தல்படி, கடலூர் மாநகர கழகம் சார்பில், கடலூர்அரசுமருத்துவமனையில் மார்ச் 1 அன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்கமோதிரம் அணிவிக்கும் நிகழ்ச்சி கடலூர் மாநகர தி.மு.க. செயலாளர் கே.எஸ். ராஜா தலைமையில் நடைபெற்றது. தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி, கடலூர் மாநகர மேயர் சுந்தரிராஜா, ஆகியோர் மார்ச் 01 அன்று பிறந்த, 11 கைக்குழந்தைக்குமோதிரம் அணிவிததனர். இந்நிகழ்வில் கடலூர் மாநகர அவைத்தலைவர் பி.பழனிவேல், மாவட்ட,மாநகர, மற்றும் பகுதி, கழக நிர்வாகிகள், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.